# Dinamani – 25 – 02 – 2016

## ஆராய்ச்சிக் கட்டுரை வெளியீடு..




சென்னை ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி இயந்திரவியல் துறை சார்பில், 'தாதுப் பொருள், உற்பத்தி அமைப்பு' என்ற தலைப்பில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரை தொகுப்பை வெளியிடும் (இடமிருந்து), கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி சாய் பிரகாஷ் லியோமுத்து, 'செயின்ட் கோஃபைன் கிளாஸ்' இந்தியா நிறுவனத்தின் தொழில்நுட்ப இயக்குநர் ஜீன் கிறிஸ்டோஃப் ஆர்னல் (பிரான்ஸ்), 'டெக்னிப் பிரான்ஸ்' நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் ரஷீத் ஷால்தி, கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார்.

தினமணி
Thu, 25 February 2016
epaper.dinamani.com/c/8

# Maalai Thamilagam - 25-2-2016_001

# சாய்ராம் பொறியியல் கல்லூரியில், தாது பொருள் உற்பத்தி அமைப்பில் ஏற்பட்ட மாற்றம் குறித்து மாநாடு




**சென்னை, பிப். 25-**

சாய்ராம் பொறியியல் கல்லூரியில் இயந்திரவியல் தாது பொருள் மற்றும் உற்பத்தி அமைப்பு என்ற தலைப்பிலான இரண்டு நாள் சர்வதேச மாநாடு கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் இந்தியா மற்றும் உலக அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுமார் 150 ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. மாநாட்டின் முக்கிய நிகழ்வான ஆராய்ச்சி கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு புத்தகம் வெளியிடப்பட்டது.

இந்மாநாட்டை செயின்ட் கோபைன் கிளாஸ் இந்தியா நிறுவனத்தின் இயக்குனர் மற்றும் இந்திய தொழில் குழுமத்தின் மாநில தலைவர் ஐசன் ஓவர் துவக்கி வைத்து பேசுகையில், கிளாஸ் தொழிற்சாலையின் பரிணாம வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சியாளர்கள் எதிர் கொள்ள வேண்டிய சவால் களை விரிவாக எடுத் துரைத்தார்.

இந்த விழாவில் டெக்னிப் பிரான்ஸ் நிறுவனத்தின் பொறியியல் துறை ஒருங்கிணைப்பாளர் ரஷீத் ஷால்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களும், ஆசிரியர்களும் ஒன்றுபட்டு இந்திய நாட்டை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்றுவதற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை எடுத்துரைத்தார். மலயா பல்கலை கழகத்தின் இயந்திரவியல் துறை இணை பேராசிரியர் நுக்மன் பின் யூசுப், தாது பொருள் மற்றும் உற்பத்தி அமைப்பு துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து விரிவாக பேசினார்.

சாய்ராம் கல்வி குழுமத்தின் தலைமை நிர் வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து தலைமை வகித்து பேசுகையில், நமது சமுதாயத்தில் ஏற்படக் கூடிய சிறு சிறு பிரச்னைகளை எதிர்கொள்வதில் உருவாகும் தடைகளை தகர்த்தெறிய இந்த மாநாடு தேவையான தொழில்நுட்ப உதவிகளை அளிப்பதோடு ஆராய்ச்சித் துறையில் அனைவரும் தங்களை அர்ப்பணிக்க ஒரு தூண்டுகோளாக அமைய வேண்டும் என கேட்டுக் கொண்டார். இம்மாநாட்டின் நிறைவு விழா கல்லூரி வளாகத்தில் நடந்தது. இதில் இந்தியா பிஸ்டன்ஸ் நிறுவனத்தின் செயல் இயக்குநர் ஜி.ஆர். ஜனார்த்தனன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிறைவுரை ஆற்றி னார். செயின்ட் கோபைன் கிளாஸ் இந்தியா நிறுவனத்தின் தொழில் நுட்ப இயக்குனர் ஜீன் கிறிஸ்டோபர் ஆர்னல், மாநாட்டு அமைப்பு தலைவர் சி.இளஞ்செழியன் ஆகியோர் பேசினர். முன்னதாக டீன் ஏ.ராஜேந்திர பிரசாத் வரவேற்றார். முடிவில் மாநாடு அமைப்பு துணைத் தலைவர் பி.விஜயராமநாத் நன்றி கூறினார்.

# Makkal Kural




# சாய்ராம் என்ஜினீயரிங் கல்லூரி எந்திரவியல்துறை நடத்திய நவீன தாதுப் பொருள் சர்வதேச கருத்தரங்கு

## விழா மலரை சாய்பிரகாஷ் வெளியிட்டார்

சென்னை, பிப். 25–

சென்னை சாய்ராம் என்ஜினீயரிங் கல்லூரியில் ''எந்திரவியல், தாது பொருள் மற்றும் உற்பத்தி அமைப்பு'' என்ற தலைப்பிலான இரண்டு நாள் சர்வதேச மாநாடு கல்லூரி வளாகத்தில் எந்திரவியல் துறையால் நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் இந்தியா மற்றும் உலக அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுமார் 150 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இம்மாநாட்டின் முக்கிய நிகழ்வான ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு மலரை இதன் தலைமை நிர்வாக அதிகார் சார்பிரகாஷ் வெளியிட்டார்.

சாய்ராம் கல்வி குழுமத்தின் கல்வி தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோ முத்து தலைமை உரையாற்றிநார்.

அவர் தமது உரையில், நமது சமுதாயத்தில் ஏற்படக் கூடிய சிறு சிறு பிரச்சனைகளை எதிர் கொள்வதில் உருவாகும் தடைகளை தகர்தெறிய இந்த மாநாடு தேவையான நவீன தொழில் நுட்ப உதவிகளை அளிப்பதோடு ஆராய்ச்சித் துறையில் அனைவரும் தங்களை அர்ப்பணிக்க ஒரு தூண்டுகோளாக அமைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இம்மாநாட்டின் செயிண்ட் கோபைன் கிளாஸ் நிறுவனத்தின் இயக்குனர் மற்றும் இந்திய தொழில் குழுமத்தின் மாநிலத் தலைவர். ஐசன் ஓவர் பேசுகையில், கிளாஸ் தொழிற்சாலையின் பரிணாம வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சியாளர்கள் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை விரிவாக எடுத்துரைத்தார். மேலும் தற்காலத்துக்கு ஏற்றவாறு அனைவரும் தங்களது அறிவு சார்ந்த திறமைகளை வளர்த்துக் கொள்வதோடு அதனை சமுதாயத்திற்கு பயன்பட கூடிய பொருளாக மாற்றுவதன் முக்கியத்துவத்தை தெளிவாக கூறினார்.

இவ்விழாவில் 'டெக்னிப் பிரான்ஸ்' நிறுவனத்தின் பொறியியல் துறை ஒருங்கிணைப்பாளர் ரஷீத் ஷால்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களும், ஆசிரியர்களும் ஒன்றுபட்டு இந்திய நாட்டினை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்றுவதற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை எடுத்துரைத்தார்

மலேசியாவில் உள்ள மலயா பல்கலைக்கழகத்தின் எந்திரவியல் துறை இணைப் பேராசிரியர் நுக்மன் பின் யூசுப் தாதுப் பொருள் மற்றும் உற்பத்தி அமைப்பு துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை விரிவாகவும், தெளிவாகவும் விளக்கவுரை ஆற்றினார்.

இந்தியா பிஸ்டன்ஸ் நிறுவனத்தின் செயல் இயக்குனர் ஜி.ஆர். ஜனார்த்தனன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிறைவு விழா உரை ஆற்றினார். செயிண்ட் கோபைன் கிளாஸ் இந்திய நிறுவனத்தின் தொழில் நுட்ப இயக்குனர் ஜீன் கிறிஸ்டோபர் ஆர்னல் (பிரான்ஸ்) கலந்து கொண்டு நிறைவு விழா உரை ஆற்றினார். இந்த மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை சமர்பித்த அனைவருக்கும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் கல்வியாளர்களின் வளர்ச்சிக்காக தாதுப் பொருள் மற்றும் உற்பத்தி அமைப்பு துறையில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்த விரிவான விவாதம் நடத்தப்பட்டது.

இம்மாநாட்டின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்துறையின் டீன், ஏ.ராஜேந்திர பிரசாத் வரவேற்புரை ஆற்றினார். மாநாடு அமைப்பு தலைவர் சி.இளஞ்செழியன் இம்மாநாடு நடத்துவதன் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடு பற்றி விரிவாக எடுத்துரைத்தார். கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயகுமார் வாழ்த்துரை வழங்கினார். இம்மாநாடு அமைப்பு துணைத் தலைவர் பி.விஜயராமநாத் நன்றியுரை ஆற்றினார்.

**The Tamil Hindu**

## உற்பத்தி அமைப்பில்

# நவீன மாற்றங்கள் குறித்த சர்வதேச மாநாடு

### சாய்ராம் பொறியியல் கல்லூரியில் தொடங்கியது

**சென்னை**

மெக்கானிக்கல், தாதுப்பொருட்கள் மற்றும் உற்பத்தி அமைப்பில் ஏற்பட்டுள்ள நவீன மாற்றங்கள் குறித்த 2 நாள் சர்வதேச மாநாடு சென்னை மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் நேற்று தொடங்கியது.

கல்லூரியின் மெக்கானிக்கல் துறை ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டை செயின்ட் கோபைன் கிளாஸ் இந்தியா நிறுவன இயக்குநர் (செயல்பாடுகள்) ஐசன் ஓவர் தொடங்கிவைத்தார். அவர் பேசும் போது, "கண்ணாடி தொழில்துறையில் ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இன்றைய சூழலுக்கு ஏற்ப அனைவரும் தங்கள் அறிவு சார்ந்த திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் அவற்றை சமுதாயத்துக்குப் பயன்படக் கூடிய பொருள்களாக மாற்றுவதும் அவசியம்" என்று குறிப்பிட்டார்.

சாய்ராம் கல்வி குழுமங்களின் தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோ முத்து, கருத்தரங்குக்கு தலைமை தாங்கிப் பேசுகையில், ஆராய்ச்சித்துறையில் அனைவரும் அர்ப்பணிப்புடன் இணைந்து செயல்பட இந்த கருத்தரங்கம் ஒரு தூண்டுகோலாக அமையும் என்றார். டெக்சிப் பிரான்ஸ் நிறுவனத்தின் பொறியியல் பிரிவு ஒருங்கிணைப்பாளர் ரஷீது ஷால்ஹி சிறப்புரையாற்றினார். மலேயா பல்கலைக்கழக மெக்கானிக்கல் துறை பேராசிரியர் நுக்மன் பின் யூசுப், தாதுபொருள் மற்றும் உற்பத்தி அமைப்புத்துறையில் ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றங்களை எடுத்துரைத்தார். 150 ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு புத்தகமும் மாநாட்டில் வெளியிடப்பட்டது.

முன்னதாக, மாநாடு அமைப்பாளர், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்துறை டீன் ஏ.ராஜேந்திரபிரசாத் வரவேற்றார். மாநாடு அமைப்புத் தலைவர் சி.இளஞ்செழியன் அறிமுகவுரை ஆற்றினார். கல்லூரியின் முதல்வர் சி.வி.ஜெயக்குமார் வாழ்த்திப் பேசினார். நிறைவாக, மாநாடு அமைப்பு துணைத்தலைவர் பி.விஜயராமநாத் நன்றி கூறினார். இந்த மாநாடு இன்று (வியாழக்கிழமை) முடிவடைகிறது.

**Trinitty Mirror**



# Sairam Engg College hosts conference on manufacturing systems

Chennai, Feb 25: A two day international conference on Mechanical, Materials and Manufacturing Systems" (ICMMMS'16) was organized by Department of Mechanical Engineering with the theme "Enhancing Mechanical Properties using Smart Materials by adopting Advanced Manufacturing Systems" at Sri Sairam Engineering College, Chennai.

About 150 research papers from India and abroad were presented in addition to invited lectures in the Conference. The Proceeding containing details of research papers was also released in the inaugural function.

Eisenhower, Director-Operations, Saint Gobain Glass India and Solar Malaysia & Chairman, Confederation of Indian Industry, Government of TamilNadu inaugurated the conference and delivered the inaugural address.

In his inaugural address , he briefed the history of glass industry and sustainability in business. He mainly focused on the role of Engineers in building up technical society and explained how to face the challenges in future.

He illustrated many problems which employees facing in his own organization and importance of converting those problems into opportunities for finding out amicable solutions. He concluded his address by saying that the students should develop a skillset during their campus life in addition to holding the Engineering Degree.

Rachid Salhi, Engineering Coordinator , Technip France graced the function as a Special Guest. His address was more informative and interesting. He stressed upon the students and staff members should shoulder the responsibility for identifying the root cause for the problems and develop the domain for solving the same.

Dr. Nukman bin Yusoff, Associate Professor, Department of Mechanical Engineering, University of Malaya, Malaysia delivered key note address on Advancements in Materials and Manufacturing Systems in the Conference.

Sai Prakash Leo Muthu, Chief Executive Officer, Sairam group of Institutions, delivered the Presidential address. He stressed the need of using this Conference as a platform for providing technical assistance and moral support for the hurdles faced by the society. He also highlighted the importance of research activities to be carried out with dedication and involvement for development of our nation.

G.R. Janarthanan , Executive Director M/s. India Pistons Ltd, Chennai presided over the Valedictory function as Chief guest and Dr.Jean Christope Arnal , Technical Director- Float M/s Saint Gobain Glass India Ltd from France graced the occasion as Special guest.

The certificates were distributed to the participants. A Panel discussion with the topic "Recent trends in Materials and Manufacturing Systems" was scheduled for the benefit of the academic community.

Dr.A.Rajendra Prasad Dean (R&D) and Convener welcomed the gatherings. Dr.C.Elanchezhian, Professor, organizing Chair briefed the purpose and importance of the Conference. Dr. C.V.Jayakumar .Principal, Sri Sairam Engineering College offered his felicitation. Dr.B.Vijaya Ramnath , Professor , organizing Co Chair proposed Vote of thanks.